# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை–வேலூர் மாவட்டம்
## (01.04.2015 முதல் 05.04.2015 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை** (27.03.2015 முதல் 30.03.2015 வரை)

வேலூர் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது . அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 36.0–37.0°C மற்றும் 24.0–25.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 28 முதல் 84 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 9–19 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 01.04.2015 | 02.04.2015 | 03.04.2015 | 04.04.2015 | 05.04.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 10 | 11 | 10 | 11 | 10 |
| காற்று வரும் திசை | தென்தென் கிழக்கு | தென்தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |
| வெப்பநிலை °C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை °C | 37 | 37 | 38 | 38 | 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை °C | 25 | 25 | 26 | 26 | 26 |
| ஈரப்பதம் | 35–75 | 32–77 | 34–78 | 32–79 | 35–80 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. உழவர்கள் கறவை மாடுகளில் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
2. கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதான் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
3. உழவர்கள் தங்களுடைய கோழிப் பண்ணைகளில் வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் திவனம் அளிக்காமால் குளிர்ந்த குடிநீர் அளிப்பதன் மூலம் வெப்பத்தக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.
4. ஆடுகளுக்கு தேவையான குடற்புழு நீக்க மருந்தை கொடுத்து பராமரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்
5. புழக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

1. நெற்பயிர் வளரும் பருவத்தில் உள்ளது.
2. நெற்பயிரில் செம்புள்ளி நோயின் தாக்கம் காணப்படுவதால் உழவர்கள் தங்களுடைய பயிருக்கு மேன்கோசெப் ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி அளவு கலந்து 15 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3முறை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் மற்றும் மஞ்சள் கரிப்பூட்டை நோயின் தாக்கம் காணப்படுவதால் உழவர்கள் தங்களுடைய நெற்பயிறுக்கு காப்பர் ஹட்ராக்சைட் ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 கிராம் என்ற அளவு கலந்து தெளிக்கும்மாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. வறண்ட வானிலை நிலவுவதால் கத்தரி மற்றும் தக்காளி செடிகளில் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் அதிகமிருக்க வாய்ப்புள்ளதால் அதை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
5. மா மரம் வளர்க்கும் விவசாயிகள் கவனத்திற்க்கு பூக்கு பருவத்தில் தத்துப்பூச்சியின் தாக்குதல் இருக்கு வாய்ப்புள்ளதால் டைமெத்தோயேட் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணிருக்கு 1.6 மில்லி அளவு கலந்து தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.